[2005 ஏப்ரல் 5

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் ஒன்று 2003–2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய்.1 திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடுகள்)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. ஞானசேகரன், என்ன சொல்லுங்கள்?

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Revenue stamp கிராமப் பகுதிகளிலே கிடைக்காத நிலை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே சொன்னீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம்.

2005 ஏப்ரல் 5]

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. என்னுடைய ஆய்வில் இருக்கிறது. கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருந்தால், அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) மணி, சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கம் வேலைவாய்ப்பிற்கு பணி நியமனத் தடைச் சட்டம் பிறப்பித்துள்ளது. ஒரு சில துறைகளில் மட்டும் இப்போது விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. எல்லாத் துறைகளிலும் காலிப் பணியிடங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, அந்தத் தடை உத்தரவை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையெல்லாம், பேசும்போது குறிப்பிடுங்கள். அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம், வரவே இல்லையா? அந்த கவன ஈர்ப்பை இன்னொரு நாள் எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

3. கவன ஈர்ப்பு

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டமும், உடனடியாக நல்ல குடிநீர் வழங்குதலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் மிகவும் பின்தங்கிய, தொடர்ந்து வறட்சியான மாவட்டப் பகுதியாக இருக்கும் என்ற காரணத்தினாலும், நிலத்தடி நீர் ஃபுளோரைடு என்ற நச்சுத்தன்மை உள்ளதாலும்..."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணி, கவன ஈர்ப்பு அறிவிப்பை மட்டும் வாசியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.